Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ராகுல் |
| Father's Name | -- | முருகன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 2nd June 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கேரள தாலக்போக்கன் கோட்டில் குடியிருந்து வருகிறேன்.நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய நண்பர்.

அ.சா.1,2,3 ஆகியோர்கள் நாங்கள் ஒன்றாக வேலை பார்த்து வருகிறோம். கடந்த 11-04-2017 அன்று காலை சுமார் 8 மணியளவில் கொளிஞ்சாம்பாறையில் இருந்து புறப்பட்டு காலை 9 மணியளவில் நாங்கள் வேலை பார்க்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். நாங்கள் வேலைசெய்யும் இடம் சுமார் 40 அடி உயரத்தில் இருந்தது. நான் கீழே வேலை செய்து கொண்டிருந்தேன். நாங்கள் சேப்டி பெல்ட் வேண்டும் என்றும் எதிரியிடம் கேட்டோம். அவர் அதற்கு மறுநாள் கொடுப்பதாகவும் தற்போது வேலை பார்க்கும் படி எங்களிடம் கூறினார். மேற்படி அந்த சிமெண்ட் சீட்டில் பெயின்ட் அடித்து வைத்திருந்தார்கள். அந்த சீட்டுகள் டேமேஜ் ஆக இருந்தது பற்றி எங்களுக்கு தெரியவில்லை. முரளியும், இவ்வழக்கில் இறந்தபோன பிரஜிஷாம் சுமார் 40 அடி உயரத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தார்கள் அப்போது அந்த சீட் டேமேஜாக இருந்ததால் அந்த 2 நபர்களும் சிமெண்ட் சீட் உடைந்து 40 அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார்கள். அந்த விபத்தில் பிரஜிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது- மூக்கிலும் காதிலும் ரத்தம் வந்திருந்தது- முரளிக்கு இடது பக்க இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. முரளிக்கு காலிலும் அடிப்பட்டிருந்தது- உடனே அவரகள் இருவரையும் கம்பெனி அருகில் இருந்த மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். ஆனால் பிரஜேஷ் இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்தார்கள். முரளிக்கு அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டது. போலிஸ் என்னிடம் இது சம்பந்தமாக என்னைவிசாரித்தார்கள். பிரஜேஷின் பிரேத விசாரணையின் போது உடனிருந்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | ரதீஸ் |
| Father's Name | -- | வாசு |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 2nd June 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கேரள மாநிலம் பாலக்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 4 வரை மற்றும் இவ்வழக்கில்

இறந்துபோன பிரஜேஷ் ஆகியோர்கள் எனக்கு நண்பர்கள் ஆவார்கள். கடந்த 11-04-2017 அன்று கேரளாவில் இருந்து நாங்கள் பொள்ளாச்சி குள்ளக்காபாளையத்தில் உள்ள யூனி காஸ்ட்ல் வேலை பார்ப்பதற்காக நாங்கள் எல்லோரும் வந்திருந்தோம். சுமார் 40 அடி உயரத்தில்சிமெண்ட சீட் போடுவதற்காக எதிரி எங்களிடம் கூறினார். பின்னர் நான், ரமேஷ், முரளி, பிரஜேஷ், சனுக் ஆகியோர் மேலே சென்று வேலை பார்த்து கொண்டிருந்தோம். அந்த சிமெண்ட் சீட் பெயிண்ட் அடிக்கப்பட்டு இருந்தது . அதில் ஏற்பட்ட விரிசல் எங்களுக்கு தெரியவில்லை. நாங்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது அந்த சிமெண்ட் சீட் உடைந்து முரளி, மற்றும் பிரஜேஷ் கீழே விழுந்து விட்டார்கள். பின்னர் நாங்கள் இறங்கி வந்து பிரஜேஷையும் முரளியையும் அருகில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆனால் பிரஜேஷ் இறந்துவிட்டார். முரளிக்கு இடுப்பிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. சேப்டி பெல்ட் மற்றும் கெல்மெட் நாங்கள்கேட்டும் பாஸ்கர் எங்களுக்கு கொடுக்கவில்லை. நாங்கள் திரும்ப கேட்டபோதும் கொடுக்கவில்லை. (மேற்படி கேள்வியானது அரசு தரப்பு வழக்கறிஞரால் சாட்சிக்கு எடுக்ககொடுக்கப்பட்டது என்று எதிரி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது). போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சுரேஷ் |
| Father's Name | -- | வேலாயுதம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 2nd June 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கேரள மாநிலம் பாலக்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பேப்ரிகேசன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 5 வரையில் உள்ளவர்கள் என்னுடைய நண்பர்கள் ஆவார்கள். கடந்த 11-04-2017 அன்று நானும், அ.சா.1 முதல் 5 வரையிலானவர்களும் பொள்ளாச்சியில் உள்ள யூனி காஸ்ட் நிறுவனத்தில் பேப்ரிகேசன் வேலை பார்த்து வந்தோம். அந்த நிறுவனத்தில் சிமெண்ட் சீட்டுகளில் பெயிண்ட் அடிக்கப்பட்டது. அதற்காக அங்கு வேலை பார்த்த நான்,சுஜித், சனுக், மற்றும் இறந்துபோன நபரும் சுமார் 40 அடி உயரத்தில் ஏறி சிமெண்ட் சீட்டை போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது சீட்டு உடைந்து முரளிலும், அந்த இறந்துபோன நபரும் கீழே விழுந்தார்கள். எங்களை வேலை செய்ய சொன்னது காண்ரேக்டர் பாஸ்கர் ஆகும். நாங்கள் மேற்படி எதிரி பாஸ்கரிடம் சேப்டி பெல்ட், கெல்மெட் ஆகிய உபகரணங்களை கேட்டோம். ஆனால் அவர் கொடுக்கவில்லை. தருகிறேன் என்று சொன்னார் ஆனால் அவர் தரவில்லை. அந்த விபத்தில் முரளிக்கு இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மற்றொரு நபர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அவர்களில் இறந்துபோன நபரை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். முரளிக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.